


திருவள்ளூர் அடுத்துள்ள வேப்பம்பட்டு பெருமாள்பட்டில் அமைத்துள்ள ஸ்ரீ ராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 16 வது பட்டமளிப்பு விழா ஸ்ரீராம் கல்லூரி குழுமங்களின் தலைவர் ஆர். நாராயணசாமி, தலைமையில் நடைபெற்றது. இதில சிறப்பு விருந்தினராக சென்னை பல்கலைக்கழக (பொ) தேர்வு கட்டுப்பாட்டாளர் எம். சீனிவாசன் கலந்து கொண்டு இளங்கலை 204 பேருக்கும் முதுகலையில் 26 பேருக்கும், சென்னை பல்கலைக்கழக தரவரிசையில் ரேங்க் எடுத்த 4 பேருக்கும் ஆக மொத்தம் 238 மாணவ மாணவிகளுக்கு பட்டங்கள், நற்சான்றிதழ்கள் வழங்கி பாராட்டி பேசினார். இதில் முதல்வர் என். கல்யாணராமன், அறங்காவலர்கள் பி. கோவிந்தராஜீலு, கஸ்தூரி பார்த்தசாரதி மற்றும் பேராசிரியர்கள் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்.